සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

14. ஒரு காரியம் எளிதில் நிறைவேறுவதைக் குறிக்கும் தொடர்
1. வழிமேல் விழி வைத்து 2. வெள்ளிடை மலைபோல
3. தேடிய பூண்டு காலில் சிக்கியது. 4. ஊன் உறக்கமற்ற

15. செய்யுளில் சொல்லுக்குச் சொல் கருத்துக்கூறும் முறை
1. பொழிப்புரை 2. புனைந்துரை 3. அணிந்துரை 4. பதவுரை

16. தொத்தாரிசு என்பது
1. உருதுமொழி 2. பிரேஞ்சுமொழி 3. பாளிமொழி 4. ஒல்லாந்துமொழி

17. ஆடுகளின் கூட்டம் மந்தை என்பது போல மயில்களின் கூட்டம்.
1. குழாம் 2. அணி 3. கலாபம் 4. குவியல்

18. சரியான வழிகாட்டி அமையாத சமூகம் திசை மாறிப் போவதைக் குறிக்கும் உவமைத் தொடர்
1. வலையிற் சிக்கிய மான் போல
2. அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல
3. மீகாமன் இல்லாத மரக்கலம் போல
4. கனி இருக்கக் காய் கவர்வது போல

19. நெருப்பில் விழுந்த தேள் எடுத்தவனையே கொட்டும் என்ற பழமொழி தரும் உட்பொருள்
1. தீயவனுக்கு நன்மை செய்யப் போய் ஆபத்தை விலைக்கு வாங்குதல்.
2. தேள் நெருப்பில் விழுந்தால் அதனைக் காப்பாற்றக் கூடாது.
3. தீயவனானாலும் ஒருவன் செய்த நன்றியை மறக்க மாட்டான்.
4.நெருப்பில் விழுந்த தேள் வேதனையால் எடுத்தவனையே கொட்டிவிடும்.

20. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும் என்ற பழமொழியின் கருத்தைத் தரும் பிறிதொரு பழமொழி
1. ஆனைக்கும் அடிசறுக்கும் 2. எலிவளையானாலும் தனி வளை வேண்டும்
3. எறும்பூரக் கற்குழியும் 4. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

- **பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. செம்மை + கண் என்பதைப் புணர்த்தியெழுத்தினால்
1. செங்கண் 2. செம்கண் 3. செம்மைக்கண் 4. சிவந்த கண்

22. கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கமலம் இது
1. எதுகை 2. மோனை 3. மடக்கு 4. சிலேடை

23. பாரதிதாசன் “ஆயிரம் பெண்கள் நீரில் ஆர்ப்பாட்டம் செய்வது போலும் பூக்கள்” என அழகுறக் குறிப்பிடுகின்றார். இது எவ்வகை வாக்கியம்
1. தனிவாக்கியம் 2. கூட்டுவாக்கியம் 3. கலப்புவாக்கியம் 4. வினாவாக்கியம்

24. இறைவனை வழிபடாத வாணாள் வீணே! இதில் வாணாள் என்பது
1. மரூஉ 2. இலக்கணப்போலி 3. மங்கலம் 4. இடக்கரடக்கல்

25. பின்வருவனவற்றுள் அகச்சுட்டாக அமைவது
1. அம்மனிதன் 2. எவன் 3. அவன் 4. இவ்வீடு

26. கடலலை என்பது
1. இயல்புப் புணர்ச்சி 2. தோன்றல் விகாரம் 3. திரிதல் விகாரம் 4. கெடுதல் விகாரம்

27. ச், ட், ப் ஆகியவற்றின் இனவெழுத்துக்களாவன
1. ஞ், ண், ன் 2. ர், ல், ண் 3. ஞ், ண், ம் 4. வ், ங், ழ்

28. பின்வருவனவற்றுள் தொழிற் பெயராக அமைவது
1. வர 2. நட 3. நடத்தல் 4. நடக்கின்றான்

29. நான் + ஐ என்பதைப் புணர்த்தி எழுதினால்
1. உன்னை 2. நானை 3. என்னை 4. நம்மை

30. "செத்தான்" என்பதன் பகுதி
1. செத்து 2. ஆன் 3. சா 4. செத்த

31. உள்ளூராட்சி தேர்தலில் போட்டியாளர் பலர் தமது ..... இழந்தனர்.
1. சந்தாப்பணம் 2. கட்டுப்பணம் 3. முற்பணம் 4. சலுகைப்பணம்

32. வரவு செலவுத்திட்டத்தில் துண்டு விழும் தொகையை ஈடுசெய்வதற்காக அரசாங்கத்தினால் புதிய ..... விதிக்கப்பட்டுள்ளன.
1. பிரேரணைகள் 2. கடன்கள் 3. மானியங்கள் 4. வரிகள்

33. பழங்கள் நன்றாக முற்றினால் அன்றி
1. பழுக்கும் 2. பழுத்தன 3. பழா 4. பழுத்தது

34. இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியை எடுத்துரைக்கும் ..... பல காணப்படுகின்றன.
1. ஆவணங்கள் 2. புனைந்துரைகள் 3. கீர்த்தனைகள் 4. மெய்கீர்த்திகள்

35. மாறாத எதுவும் வளர்ச்சியடைவதில்லை மொழி இதற்கு விதிவிலக்கல்ல. வாழும் மொழிகள் எல்லாம் இடையறாது மாற்றத்திற்கு உள்ளாகின்றன. மாற்றமும் வளர்ச்சியும் ஒரு நிகழ்ச்சியின் இரு அம்சங்களாகும். மொழி ஒரு சமூக சாதனம் என்ற வகையில் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களும் வளர்ச்சிகளுமே மொழி மாற்றத்தையும் வளர்ச்சியையும் இறுதியாக தீர்மானிக்கின்றன.

மேற்குறிப்பிட்ட பந்தியில் ஆசிரியருக்கு உடன்பாடு இல்லாத கருத்து யாது?
1. மொழியில் ஏற்படும் மாற்றங்கள் அதன் வளர்ச்சியின் அடையாளம்.
2. சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களாலேயே மொழி மாற்றம் ஏற்படுகின்றது.
3. மொழிவளர்ச்சி காரணமாகவே சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன.
4. மொழி ஒரு சமூக சாதனம்

36. விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாயிகளுக்கு உர ..... வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
1. நிவாரணம் 2. மானியம் 3. ஊதியம் 4. சன்மானம்

37. ரூபவாகினி ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வெள்ளத்தால் பாதிக்கபட்டமக்களுக்கான வெள்ள நிவாரணப் பொருட்களைச்
1. சேகரித்தன 2. சேகரித்தது 3. சேர்த்தார் 4. சேர்த்தனர்

38. உலகிலுள்ள தொழில் ஒவ்வொன்றும் தனித்துவமானதும் அத்தியாவசியமானதுமாக
1. விளங்குகின்றன 2. விளங்குகின்றது 3. அமைகின்றன 4.கொள்ளவேண்டியது

39. அந்த விபத்து நடந்தமைக்கு வீதியின் சீர்கேடும்
1. பிரதான காரணமாய் அமைந்தது. 2. ஒரு காரணமாய் அமைந்தது.
3. பிரதான காரணம் 4. முதன்மைக் காரணமாகி விட்டது.

40. ஒழுங்கின்றிக் கிடக்கம் வாக்கியங்களை ஒழுங்குபடுத்துக.
அ. ஆகவே தொல்காப்பிய காலத்தில் வடக்கே வேங்கடமலை வரையில் தமிழ் வழங்கியது எனக் கொள்ளலாம்.
ஆ. இந்த அடிப்படையிலேயே தொல்காப்பியத்தின் பாயிரம் செய்யுள் தமிழ்மொழி வழங்கும் எல்லையை "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை" என்று கூறுகிறது.
இ. அரசியல் எல்லைக்கும் மொழி வழங்கும் எல்லைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.
ஈ. மாறாக அரசியல் எல்லைகளைப் பொருட்படுத்தமாட்டார்கள்.
உ. அதனால் இலக்கண ஆசிரியர்கள் தாம் எந்த மொழிக்கு இலக்கணம் எழுதுகிறார்களோ அந்த மொழி வழங்குகின்ற எல்லையையே கருத்திற் கொள்வார்கள்.

1. இ, ஆ, ஈ, உ, அ, 2. இ, ஆ, உ, ஈ, அ 3. இ, உ, ஈ, ஆ, அ 4. உ, ஈ, இ, ஆ, அ

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

(ஆ) இன்று எமது நாட்டில் வீதி விபத்து என்பது சர்வசாதாரணமாகி விட்டது. ஊடகச் செய்திகளில் இவை முக்கிய இடம் வகிக்கின்றன. வீதி அபிவிருத்தி போக்குவரத்து சட்டங்கள் மீறுதல் போன்ற பல காரணங்களால் இவ்விபத்துக்களை தவிர்க்க முடியாதுள்ளது. வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஒரு மேடைப் பேச்சு.

(இ) உல்லாசப் பயணிகளின் வருகையால் நாட்டின் வருமானம் அதிகரித்து நாடு முன்னேற்றடையும் எனக் கருதும் ஒருவருக்கும், நாட்டின் பண்பாடு சீரழிவதுடன் போதைப்பொருள் பாவனை, நோய்த் தொற்றுகள் ஆகியன ஏற்பட்டு நாடு பாதிப்படையும் எனக் கருதும் மற்றொருவருக்குமிடையிலான ஓர் உரையாடல்.

(ஈ) ராமு நன்றாக உழைத்து சம்பாதித்தான் பணக்காரனாகவும் இருந்தான். தனது மனைவி, பிள்ளைகளை நன்றாகவே கவனித்தான். தனது குடும்பங்களுக்கு வாரி வழங்கினான் மனைவிக்கோ அடுத்தவர்களுக்கு வரி வழங்குவது பிடிக்கவில்லை. அதனால் குடும்பத்தில் தினந்தோறும் பிரச்சினைகள் வெடித்தன. இதனைத் தொடர்ந்து சிறுகதையாக எழுதுக. (25 புள்ளிகள்)

03. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் உமது வசன நடையில் எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).

மொழி மனிதனுடைய உடலில் ஊறாததாக இருக்கலாம். ஆனால் அவனுடைய மூளையை உருவாக்கியது அதுவே அவன் எண்ணும் எண்ணம், பேச்சு, எழுத்து மூன்றிலும் மொழி உள்ளது. அதன் செல்வாக்கு உள்ளது. மொழி வேறுபாடு குழந்தையின் தொட்டிலிலேயே தொடங்குவது, மரணப்படுக்கை வரை தொடர்ந்து வருவது, இடையில் மனிதன் கற்ற எத்தனையோ பழக்க வழக்கங்கள் மாறிவிடுகின்றன. ஆனால் மொழியின் செல்வாக்கு மாறுவதில்லை. பரம்பரையாக ஆசிரியத் தொழிலில் இருந்தவன். துப்பாக்கி ஏந்தும் தொழிலுக்குச் செல்கிறான். செருப்புத் தொழில் செய்தவன் நாட்டை ஆளுகின்றான். பரம்பரையாகத் தராசு பிடித்தவன் விமானம் ஓட்டுகின்றான். பரம்பரையாக ஏர் ஓட்டியவன் நூல் எழுதுகின்றான். ஆனால் மொழி மாறுவதில்லை பரம்பரையாகக் குடித்து மயங்கிப் புலால் மணம் கமழ்ந்த குடும்பத்தில் பிறந்த பெனாட்ஷா குடியை அறவே வெறுத்து மரக்கறி உண்டு வாழ்ந்து வந்தார். வழி வழியாக வைதிகமாக இருந்த குடும்பத்துப் பண்டிதர் நேரு, இருபதாம் நூற்றாண்டில் புதுப் புதுப் பழக்கங்களில் மூழ்க்கியிருந்தார் செல்லும் நாடுகளுக்கு ஏற்றபடியெல்லாம் நடையுடைகளை மாற்றியிருந்தார். ஆனால் மொழியின் தொடர்பு அவரை விட்டதா? லண்டன் பாராளுமன்றத்தில் பேசும் போது முதலில் பத்து நிமிடம் தன் தாய்மொழியில் தான் பேசியிருந்தார். தாகூரையும் காந்தியடிகளையும் விட உலக ஒற்றுமையை நாடியவர்கள் உண்டோ? அதேவேளை அவர்களை விடத் தாய்மொழியிற் பற்று கொண்டவர்களும் இல்லை அல்லவா? இந்த அறிஞர்களை விட்டு நீங்காத மொழிப்பற்று தமிழரை மட்டும் விட்டு நீங்க வேண்டும் என்று சொல்வது தகுமா? சொன்னால் சொல்கிறவர்களின் மூளையில் நஞ்சு கலந்து கிடக்கிறது என்றே கொள்ளல் வேண்டும். (10 புள்ளிகள்)

04. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

வாழ்கையில் அன்பு வேண்டும், அருள் வேண்டும், உண்மை வேண்டும், நன்றியுணர்ச்சி வேண்டும் என்றெல்லாம் சான்றோர்கள் அறிவுறுத்தினார்கள். திருக்குறள் முதலான நீதி நூல்கள் இவற்றைத் தெளிவாக உணர்த்துகின்றன. ஆனால் அறிவியல் தரும் விளக்கங்களை மனம் நம்பவது போல் இந்த அறநெறியை வாழ்க்கை நெறியை நம்புவதில்லை. பொய் சொல்லக் கூடாது நன்றி மறக்கக் கூடாது. அன்போடு பழக வேண்டும். இன்சொல் நன்மை பயக்கும் என்னும் அறிவுரைகள் எல்லாம் மறு உலகிற்கு உதவியான புண்ணிய வழிகள் என்று பலர் எண்ணுகிறார்கள். இந்த உலகத்தில் மக்கள் சமுதாயமாய்க் கூடி வாழ்வதற்கு அவை தேவையானவை. பொய்யர் பலர் நன்றியில்லாதவர் பலர் உள்ள சமுதாயத்தில் வாழ்க்கை அமைதியாக இருக்காது ஒருவரையும் எளிதில் நம்ப முடியாது. உள்ளம் கலந்து யாருடனும் பழக முடியாது அப்படிப்பட்ட நிலையை ஓர் ஓரில் ஒரு நாட்டில் பெரும்பான்மையாக இருந்தால் இங்கு வாழ்க்கை அமைதியாக நடப்பதற்கு வழி இல்லை. ஆகையால் நம் முன்னோர்கள் நீதிநெறிகளாக வற்புறுத்திக் கூறியவை இந்த உலகில் அமைதியாக வாழ்வதற்கு தேவையானவை என்பதை தெளிவாக

உணர வேண்டும். செத்த பிறகு முக்திக்கு உரிய வழிகள் என்று அன்பு, உண்மை என்பவற்றை ஒதுக்கி வைக்கக் கூடாது. மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு அவை தேவையானவை என்று உணர வேண்டும். அன்பு இல்லாமல் நண்பர் இருவர் சேர்ந்து பழக முடியுமா? அன்பு இல்லாத ஒரு குடும்பத்தலைவரை மனைவி மக்கள் நம்பி வாழ்க்கை நடத்த முடியுமா? நாட்டினிடத்திலும் மொழியினிடத்திலும் அன்பு இல்லாத மக்களைக் கொண்டு நல்லாட்சி நடத்த முடியுமா? உண்மை இல்லாத தொழிலாளிகளைக் கொண்டு ஒரு தொழிற்சாலையை வளம் பெற நடத்த முடியுமா? நேர்மை இல்லாத அறிவாளிகளைக் கொண்டு ஓர் அலுவலகத்தை நடத்த முடியுமா? ஆகவே உண்மை, நேர்மை, அன்பு முதலியவை இந்த வாழ்க்கைக்குத் தேவை என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

01. வாழ்க்கைக்குத் தேவையானவை எவை ?

02. மனித வாழ்க்கைக்குத் தேவையான நல்ல கருத்துக்களைக் கூறும் நூல் எது?

03. இந்த உலகில் மக்கள் சமுதாயமாய் கூடி வாழ்வதற்கு தேவையானவை எவை ?

04. அமைதியான வாழ்க்கைக்கு எதிராளிகள் யார் ?

05. பின்வரும் சொற்களின் ஒத்த சொற்களை தருக.

சான்றோர் / புண்ணியம் / வழி / செம்மை (10 புள்ளிகள்)

05. ஒக்டோபர் மாதம் முதலாந் திகதி உலக சிறுவர் தினம் கொண்டாடப்படுவது வழக்கமாகும். இத்தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம் பற்றியும் சிறுவர் உரிமை பற்றியும் விளக்கம் கேட்கும் உமது நண்பனுக்கு 100 சொற்களில் கடிதம் எழுதுக.

அல்லது

இன்று பொலித்தீன் பாவனை அதிகரித்துச் செல்கின்றது. இதனைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீங்குகள் குறித்து துண்டுப்பிரசுரம் ஒன்றை எழுதுக. (15 புள்ளிகள்)

* * *

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව Provincial Department of Education

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதியையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

01. வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான் கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறித்து வானவரை யழைப்பர்
கவன சித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பர்
தேனருவி திரையெழுப்பி வானின்வழி யொழுகும்
செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறை முடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே

அ. குற்றால நாதரின் சிறப்புக்கள் எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது ?
ஆ. இப்பாடலில் கையாளப்பட்ட அணி யாது ?
அப்பாடலடிகளைக் குறிப்பிடுக.

02. தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன் புறா அர் ஆயினும் கையின்
ஈர்த்துஇன் புறூஎம் இளையோர் போல்
உற்று இன் புறேஎம் ஆயினும் நற்றேர்ப்
பொய்கை ஊரன் கேண்மை
செய்த இன் புற்றனெம் செறிந்தன வளையே

அ. இப்பாடலில் உள்ள அணியை விளக்குக.
ஆ. இப்பாடலில் கூறப்பட்டுள்ள திணை, ஒழுக்கம் என்பவற்றைத் தருக.

03. இலட்சியங்கள் பல, பல்வேறு வகையின. பல்வேறு இயல்பமைந்த இலட்சியங்களைத் தத்தம் இயல்புக்கிணங்கக் கடைப்பிடித்தொழகும், ஒழுக முயலும் தனி மனிதர் பலர் தம்முள் ஒன்று கூடிய கூட்டமே சமூக அமைப்புக்கு அத்திவாரமாகின்றது. வள்ளுவப் பெருந்தகையாரும் தனி மனிதனை நிலைக்களனாகக் கொண்டே நல்லறங்களை வகுத்தோதிய மாண்பும் நாம் அறிந்து கொள்ளுதற்குரியதாகும். தனிமனிதனிடத்து இலட்சியம் அமையாதாயின் இலட்சியம் அமைந்ததொரு சமூகத்தை உலகில் உருவாக்குதல் சாலாது.

அ. சமூக அமைப்புக்கு அத்திவாரம் இடுபவர்கள் யாவர் ?
ஆ. தனிமனிதனுக்கு நல்ல அறங்களை வகுத்துக் கூறியவர் யார் ?

04. யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீ இக் கொளல் வேண்டும் யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்
எறிந்தவேல் மெய்யதாவால் குழைக்கும் நாய்

அ. எதைப் போன்ற குணமுடையோர் நட்பை விலக்கிக் கொள்ளல் வேண்டும்?
ஆ. எதுபோன்ற குணமுடையோர் நட்பைத் தழுவிக் கொள்ளல் வேண்டும்?

05. கைவேல் - எறிகிறவேல் - இறகுள்ள அம்பு - இல்லாத அம்பு - வாள் - தண்டு - சக்கரம் இவற்றிற்கு மேலே தெய்வப் படைகளிலும் கைவைக்கிற சமயம் ; அந்தச் சமயம் பிறிற்றோ கட்சிக்குப் பேசவந்தவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள் வாதமில்லா இடத்திலும் வாதம் வருவிக்கக் கூடியவர்கள், நாவலர் அவர்களின் காசம் அவர்களுக்குச் எதிர்பாராத அனுகூலம் அளித்தது.

அ. இங்கு இடம்பெற்ற போர்க்கலங்கள் எவற்றைச் சுட்டி நிற்கின்றன?
ஆ. பிறிற்றோவின் சார்பில் வாதாடியவர்கள் பற்றிய கருத்து யாது? (4*x*5=20 புள்ளிகள்)

03. குகப்படலத்தில் கம்பன் அளித்த கோசலையினதும் கைகேயியினதும்,

அ. பாத்திரப்படைப்பை விளக்குக.
ஆ. இங்கு கையாளப்பட்டுள்ள அணிச்சிறப்புக்களை விளக்குக.

அல்லது

அ. " அன்றாட வாழ்வில் கம்பியூட்டரின் தாக்கம் " சித்தரிக்கப்படுமாற்றை விளக்குக.

ஆ. "கம்பியூட்டர் சிறுகதையானது நகைச்சுவையோடு எழுதப்பட்டள்ளது" இக் கூற்றின் பொருத்தப்பாட்டைத் தருக.

இ. கதையில் இடம்பெறும் உவமைத்தொடர்கள் ஐந்து தருக. (15 புள்ளிகள்)

04. பாரதியார் சுயசரிதை என்ற பாடப்பகுதியில்

அ. பாரதியாரின் பிள்ளைக்காதல்

ஆ. மானுடன் தாம் விரும்பியவற்றை அடைவதற்கு முயற்சித்தலும், அடையாமல் போவதற்கான காரணங்களும் புலப்படுத்தப்பட்டிருக்குமாற்றினை விளக்குக.

அல்லது

திருக்குறளிலுள்ள பேதைமை என்ற அதிகாரத்தில்

அ. பேதைமை என்றால் என்ன ?

ஆ. பேதைமையின் தொழில் யாதெனக் கூறப்படுகிறது ?

இ. ஒருவனுக்கு அறியாமை எல்லாவற்றிலும் அறியாமை எது ? (15 புள்ளிகள்)

05. எது நல்ல சினிமா என்ற பாடப்பகுதியில்

அ. நாடகத்திற்கும் சினிமாவிற்குமிடையான வேற்றுமை

ஆ. நல்ல சினிமா வளராததற்கான காரணங்களை விளக்குக. (10 புள்ளிகள்)

06. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்

அ. ஆறுமுகநாவலர் வீறுடன் எழுந்ததோற்றப் பொலிவு

ஆ. வாதமகாசபையில் இடம்பெற்றவை எவை என்பதை சுருக்கமாகத் தருக. (10 புள்ளிகள்)

07. சங்கப்பாடல்களில்

அ. தலைவியின் நிலை பற்றிய தோழியின் கூற்று.

ஆ. "இனிய இளமையை நினைந்து இரங்கல்" என்பது சித்தரிக்குமாற்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

* * *

முதலாம் தவணைப் பரீட்சை - 2018
தமிழ் மொழியும் இலக்கியமும்
தரம் - 11 - பகுதி I
விடைகள்

1 - 2	11 - 4	21 - 1	31 - 2
2 - 1	12 - 1	22 - 2	32 - 4
3 - 3	13 - 3	23 - 3	33 - 3
4 - 1	14 - 3	24 - 1	34 - 4
5 - 4	15 - 4	25 - 3	35 - 3
6 - 1	16 - 2	26 - 1	36 - 2
7 - 2	17 - 1	27 - 3	37 - 2
8 - 2	18 - 3	28 - 3	38 - 1
9 - 4	19 - 1	29 - 3	39 - 2
10 - 1	20 - 3	30 - 3	40 - 3

(40 புள்ளிகள்)

பகுதி II

01. (1) தேன் + படு +பனையின் + திரள் + பழத்து + ஒரு + விதை
(2) சமூகம் - சமூகக் குழு
சமுகம் - வரவு / பிரசன்னம் (எனும் பொருள் விளங்க வாக்கியம் அமைக்குக)
(3) தீயவர்களிடம் நட்புமின்றி பகையுமின்றி விலகி இருப்பதுவே சாலச் சிறப்புடையது.
(4) குமார் நன்றாகப் படித்தான், பரீட்சையில் சித்தியடைந்தான்.
பல்கலைக்கழகம் சென்றான்.
(5) நாற்பது வயதைக் கடந்த பெண்மணி அந்த வீட்டின் கூண்டினைத் தொட்டுப் பார்த்தாள்.
(6) வா + த் + த் + அன் +அன்
(7) திட்டவட்டமாக
(8) பேச்சு, எழுத்து
(9) முன்னுக்குப் பின் முரண்படக் காட்டல்
(10) முடிவுரை (2X10=20 புள்ளிகள்)

02.

பொருளமைவும் அளவும்	-	12 புள்ளிகள்
கருத்தும் மொழிச் செம்மையும்	-	06 புள்ளிகள்
எழுத்து நுட்பங்கள்	-	05 புள்ளிகள்
தலையங்கம்	-	02 புள்ளிகள்
மொத்தம்	-	25 புள்ளிகள்

03. பிரதான கருத்து - மொழியின் இன்றியமையாமை
பிரதான கருத்துக்குப் பொருந்திய உட்கருத்துக்கள்
- மனிதனின் செயற்பாடுகளில் மொழியின் செல்வாக்கு
மனிதனின் பழக்கவழக்கங்கள் மாறினாலும் மாறாதது மொழியின் செல்வாக்கே
- தாய் மொழிப் பற்று
பெனார்ட்ஸா, நேரு போன்றவர்களைக் காட்டல்.
தமிழரிடம் மொழிபற்றி நீங்காதிருக்க வேண்டும் போன்ற கருத்துக்களை உள்ளடக்கிய நிலையில் சுருக்கம் அமைதல் வேண்டும். (10 புள்ளிகள்)

04. (1) அன்பு, அருள், உண்மை, நன்றியுணர்ச்சி என்பன வாழ்க்கைக்குத் தேவையானவையாகும்.
(2) திருக்குறள்
(3) பொய் சொல்லக்கூடாது, நன்றி மறக்கக்கூடாது, எல்லோருடனும் அன்பாக பழக வேண்டும். இன்சொல் நன்மை பயக்கும் அறிவுரைகள் என்பன இந்த உலகில் சமூதாயமாய் கூடி வாழ்வதற்கு தேவையானவையாகும்.
(4) பொய்யர்கள் , நன்றியில்லாதவர்கள் ஆகியோர் எதிராளிகள் ஆவர்.

(5) சான்றோர்கள் - கற்றோர், அறிவாளிகள், புண்ணியம் - நன்மை, வழி - நெறி, செம்மை - தெளிவு, வளம். (10 புள்ளிகள்)

05. (1) முகவரி, விளிம்பு, உடல், முடிப்பு, ஒப்பம்

(2) கவர்ச்சிான தலைப்பு, உள்ளடக்கம், போதுமான விளிப்பு, வெளியிடுவோர் விபரம், திகதி

உள்ளடக்கம்	-	8 புள்ளிகள்
அமைப்பு	-	4 புள்ளிகள்
மொழி நடை	-	3 புள்ளிகள்
		15 புள்ளிகள்

பகுதி III

01. (1) அ. திருக்குற்றாலக் குறவஞ்சி ஆ. உருவக அணி

(2) அ. தாழும் உள்ளம், சோர்வு, ஆடு போல் பல பொருள் நாடுதல், வீழும் ஓர் இடையூற்றினுக்கு அஞ்சுதல்.
ஆ. விதியை நோதல், தம் நண்பரைத் தூற்றுதல், கோப மிகுதியுடன் நண்பரை நிந்தித்தல். சதிகள் செய்தல், சாதகங்கள் புரட்டல், புலைநாத்திகம் கூறல்...

(3) அ. நாயக்கர் காலத்திற்கு உரியது
ஆ. குதிரைப்படை, யானைப்படை, காலாட்படை, தேர்ப்படை

(4) அ. தும்பிசேர் கீரன் - குறுந்தொகை ஆ. தோழி கூற்று

(5) அ. கடல்
ஆ. ஆசைக்கிளியே - மருதங்கிளி - வஞ்சிகமே
ஒசைக்குரலே - நீலவண்டே - மாமிமகளே

(6) அ. சிலேடை அணி ஆ. காளமேகப் புலவர்

(7) அ. அட்ச இருதயக் கலை என்பது ஒரே பார்வையில் எண்ணுகின்ற ஆற்றலைப் பெற்றிருத்தலாகும்.
ஆ. காளமேகப் புலவர்

(8) அ. கழுவாத கால் ஆ. உவமை அணி

(9) அ. பிரமன்
ஆ. யாரால் - குகனால்
யாருக்கு - பரதனுக்க

(10) அ. புறநானூறு ஆ. வண்டல் மண்ணால் செய்யப்பட்ட பொம்மை. (20 புள்ளிகள்)

02. 1. (அ). வளைந்த இளம்பிறையினைத் தம் சடையிலே முடிந்திருக்கும் அழகினையுடையவராய் விளங்குபவர் சிவபெருமான் எனச் சிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.
(ஆ). உயர்வு நவிற்சி அணி
1. கானவர்களின் விழியெறிந்து வானவரையழைப்பர்.
2. தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்.

2. (i) உவமை அணி

உவமானம்	-	கைவண்டியில் ஏறிச் செலுத்தி இன்பம் பெறாவிடினும் கையால் இழுத்து இன்பம் அடையும் இளம்பருவத்தினர்.
உவமேயம்	-	தலைவன் மெய்யுற்று தலைவி இன்பம் பெறா விடினும் தலைவன் நட்பை உள்ளத்தே பெருகச் செய்து இன்பமுற்று தலைவி.
பொதுத்தன்மை	-	வேண்டிய இன்பமில்லாத விடத்து வேறொரு இன்பம் பெற்றுத் திருப்தியடைதல்.

(ii). திணை - மருதம்
ஒழுக்கம் - ஊடல்

3. (i) பல்வேறு இயல்புகள் அமைந்த இலட்சியங்களைத் தத்தமது இயல்புகளுக்கிணங்கக் கடைப்பிடித்து ஒழுகும் / ஒழுகமுயல்வர்.

(ii) வள்ளுவர்

4. (i) பலநாட்கள் பழகியிருந்தாலும் பாகனையே கொல்லும் பழியுணர்ச்சி மிக்க யானையைப் போன்றோருடைய நட்பை விலக்கிவிட வேண்டும்.

(ii) எசமான் தண்டித்தாலும் வாலை வளைத்த ஆட்டும் நன்றியுள்ள நாயைப் போன்றவர் நட்பைத் தழுவிக் கொள் வேண்டும்.

5. (i) பலவிதமான காரணங்களை எழுடுத்துக்காட்டி ஆக்ரோஷமாக வாதிட்ட வாதங்களை சுட்டி நிற்கின்றன.

(ii) யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் உள்ள பிரபல வழக்கறிஞர்கள் வாதமில்லாத இடத்திலும் வாதம் வருவிக்கக்கூடியவர்கள் தந்திரமான ஆற்றலுள்ளவர்கள். (20 புள்ளிகள்)

03. அ. கோசலை

உறவினர்கள் தேவர்களோடு வணங்குமாறு நின்ற தசரதச்சக்கரவர்த்தியின் முதலாவது பட்டத்தரசி.

- கண்ணனின் அவதாரமாகிய இராமனைப் பெற்ற பெருமைக்குரியவர்
- கன்றைப் பிரிந்த புனித பசுவின் துயருடையவள்
- கொடி போன்றவள்
- மகள் இராவணனுக்கு என்று வேறுபாடு காட்டாத அன்பு செலுத்தியவள்
- ஐவரையும் சமமாக வைத்து மதித்தவள்

கைகேகி

கணவன் சுடு காட்டுக்குச் செல்லவும் பரதன் துயரக்கடலில் மூழ்கவும் கருணைக் கடல் போன்ற இராமன் காட்டுக்குச் செல்லவம் விரக்கழல் அணிந்த பாதங்களுடைய திருமால் முன்னர் நெடுமையால் அளந்த உலகம் முழுவதையும் தன் மனத்து நினைத்த செய்யும் கொடுமையால் அளந்த கைகேகி.

ஆ. உருவக அணிச்சிறப்பு

i. கொற்றத்தார்க் குரிசில்
கொற்றத்தார்க் குரிசிலாக பரதன் உருவகப்படுத்தப்பட்டுள்ளான்.

ii. கோக்கள் வைகுமுற்றத்தான்
அரசர்கள் தங்கும் முற்றத்தை உடையவனாகத் தசரதன் உருவகப்படுத்தப்பட்டுள்ளான்...
உவமை அணிச்சிறப்பு

iii. குன்று அனைய திருநெடுந்தோள்
உவமானம் - மலை
உவமேயம் - திருநெடுந்தோள்
பெர்த்தன்மை - அழகிய உயர்ந்தும், திண்மையானதும்.

iv. கைவீரர்களிறு அனைய காளையிவன்
உவமானம் - தும்பிக்கையுடைய ஆண்யானை
உவமேயம் - கைவீரக்குகன்
பொதுத்தன்மை - வீரம்

v. விலங்கல் திண்தோள்
உவமானம் - விலங்கல் (மலை)
உவமேயம் - தோள்
பொதுத்தன்மை - திண்மை

அல்லது

அ. புதிய தலைமுறை கணினியோடு இயல்பாக ஒட்டுதல் கல்வி - விளையாட்டு - பொஜபோக்கிற்குக் கணினி உதவுதல்.

- நண்பர்களிடையே நெருக்கத்தை ஏற்படுத்தல்.
- கம்பியூட்டரின் பரிபாஷை பரவலடைதல்.
- அந்தரங்க உரையாடலில் கணினி மொழி செல்வாக்குப் பெறுதல்..

ஆ. • தமிழ்க் குடும்பம் கணினி வழங்குவதால் நிகழும் விளைவுகளே கதைக்கரு
- கணினியின் ஆண், பெண் வகைப்பாடு.
- தூண்டில் விற்பனை நிலையப் பெண் கேட்ட வினாக்கள்
- காளமேகப்புலவரின் அனுபவம்.
- மடிக்கணினியைப் பெண் எனல்...

இ. • கல்லுளி மங்கன் போல
- ஆர்மேனியப் பெட்டிபோல
- கத்தரிக்கோல் வெட்டுவது போல
- சந்தி பிரிக்காத பாடல்போல
- ஆலத்தி எடுக்க நிற்பது போல.... (15 புள்ளிகள்)

04. அ. • பாரதியின் பிள்ளைக்காதல் - என்பது வயதுச் சிறுமியை பதினைந்து வயதில் காதலித்தமை
- நீரெடுத்து வரும் வரை காத்து நிற்றல் - உவமானத்துடன் விளக்கல்.
- அவள் போகின்ற வழி முழுவதும் அவளது பின் அழகினை ஆராய்ந்து மகிழ்தல்.
- அவளது நினைவில் இழுபடல் - மகிழ்ச்சியடைதல்
- அவளைக் காணும் போதும் புத்துயிர் பெறுவதாக உணர்தல்.

ஆ. • ஐம்புலன் அந்தக்கரணங்கள் - உயிருடன் சேர்ந்து விருப்புடன் முயற்சித்தல் மிருகக் குணத்தை தவிர்த்தல்.
- அடையாமைக்கான காரணம் - போலியான உலகில் காண்கிற பொருட்கள் "அனைத்தையும் விரும்புதல்.
- தாழ்நதமனம், சோம்பியிருத்தல், ஆடுமாடு போல அங்குமிங்கும் தாவித்தாவி பல பொருள் நாடுதல்.

அல்லது

அ. பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்டுதியம் போகவிடல்.
பேதைமை என்று சொல்லப்படுவது ஒருவனுக்கு ஏனைய குற்றங்கள் எல்லாவற்றிலும் மேலான ஒன்று அது யாது என்றால் தனக்குக கேடு தருவனவற்றைக் கைக்கொண்டு, ஆக்கம் தருவனவற்றைக் கைவிடுதலாகும்.

ஆ. வெட்கப்பட வேண்டியவற்றிற்கு வெட்கப்படாமை நாடவேண்டியவற்றை நாடாமலிருத்தல், எவரிடத்தும் அன்பு செலுத்தாமை, பேண வேண்டிய நன்மைகளை விரும்பிப் பாதுகாக்காமை என்பன அறிவிலிகளின் தொழில்களாம்.

இ. தனக்குப் பொருந்தாத ஒழுக்கத்தில் ஆசை கொள்ளுதல் ஆகும். (15 புள்ளிகள்)

05. அ. • சபையினர் முன் நிகழ்த்தப்படாமை
- நாடகத்தனம் இல்லை.
- வாய்ப்பேச்சை விட சினிமா மொழி மூலமானது
- தொழில் நுணுக்க வளர்ச்சியின் படைப்பு

ஆ. • நாடகத்தனம் மிகுந்திருத்தல்.
- மையக்கரு சாராத காட்சிகளைச் சேர்த்தல்.
- வாய்ப் பேச்சால் கதை சொல்லல்.

இ. • கம்பீரமான தோற்றம்
- வீறு கொண்ட பார்வை
- எண்ணங்களின் வேகம் உதாரணத்துடன் விளக்கல்.

ஆ. • இலங்கை சட்டசபையில் பிரதிநிதித்துவத்திற்காக கல்விமான்கள்.
- பிரபுக்கள் கூட்டம் கூடி (விசுநாத பிள்ளையின் தலைமையில் நடப்பது.
- பாரிய சட்டம் வாதப்பிதிவாத மின்னல்கள், முழக்கங்கள் விளக்கப்படல். (10 புள்ளிகள்)

07. அ. தலைவியின் நிலை - "ஊர்ந்து இன்புறார்..." என்ற செய்யுளில் தோழியின் கூறற்ாக உவமை அணிமூலம் விளக்கப்படல்.

ஆ. இனிய இளமை (கல்லா இளமை) நினைவு உதாரணத்துடன் விளக்கப்படல். (10 புள்ளிகள்)

LOL.lk
BookStore

විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න

ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න



| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර | A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත් | School Book | ගුරු අත්පොත්

pesuru Prakashana Private Ltd. | Akura Pilot | සමනල දැනුම | සතර

පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට

www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න